சித்து, கைத்தறித்துறையின் ஒதுக்கீட்டுக்குள் கைத்தறி ஆடைகளின் 'அடிப்படை விலை', 'வரம்பு விலை' ஆகியவற்றை நிர்ணயிக்கவேண்டும்.

(இ) உறுதியான ஏற்றுமதி ஒப்பந்தங்களை பெற்றுள்ள உண்மையான ஏற்றுமதியாளருக்கு பங்கீட்டில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

என்று தக்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மத்திய அரசு இதை ஒரு தலைப்பட்ச முடிவாக எடுத்து இருக்கிற காரணத்தால் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் இருந்து தெரிகிறது. இந்த முடிவுகளையும், பரிந்துரைகளையும் மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்த பிறகு, தொடர் நடவடிக்கையாக என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது? மத்திய அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இந்த அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறதா? அப்படி என்றால், அதனுடைய விளைவுகள் என்ன, இதுவரையில் இல்லாவிட்டால், எப்போது நடத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி வளர்ச்சிக் குழுவின் ஆணையர் திரு. மணி நாராயணசாமி அவர்கள் சென்னைக்கு வந்து இருக்கிறார்கள். இன்று 11 மணிக்கு மத்திய அரசின் அந்த அலுவலரிடமும், மற்ற மாநில அரசு அதிகாரிகளிடமும் கலந்து ஒரு கூட்டத்தை இன்று நடத்த இருக்கிறோம். அந்தக் கூட்டத்திலே இந்தப் பிரச்சனைகள் பற்றி மீண்டும் விவாதித்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, கைத்தறி ஏற்றுமதித் துறையில் இன்று ஏற்பட்டு இருக்கும் இந்த நெருக்கடி தவிர்க்கப்படும். அந்த முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, 1959-ம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியின் கீழ், வேளாண்மைத் துறையில் 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம்

நாளிட்ட அரசாணை எண். 305-ன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

1. திரு. ஜி. ராமசாமி
2. திரு. ந. சோமசுந்தரம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்;

மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (எப்) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (பி) பகுதியின்படி 31—1—1966-ம் நாளன்று முடிவடைந்துவிட்டபடியாலும்;

1959 ஆம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்ட மன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படவேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(5). அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 11—3—1978, சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 13—3—1978, திங்கள் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துககொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 14—3—1978, செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.